மாட்டோம் என்கிற நிலைமையிலேயே இருந்துவிட்ட காரணத்தினாலே, அதிலே வேறு ஒன்றும்--நேற்று, அதற்கு முந்தின நாள்--நாம் செய்ய முடியாமல் இருந்தோம். ஆனால், இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள், இந்தச் சூழ்நிலையிலேயும் நாம் பெருந்தன்மையோடு நடந்துகொள்வோம் என்கிற அந்த வேண்டுகோளை வைத்திருக்கிற காரணத்தால், அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, இந்த இரண்டு, மூன்று நாள் தண்டனையே அவர்களுக்குத் தண்டனைதான் என்கிற அளவில் இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிட்டு, அவர்கள் அவைக்கு வந்து, தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற முறைப்படியான ஒரு எதிர்க்கட்சியாக, விதிமுறைகளின்படி நடந்துகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அவைக்கு வந்து தங்களுடைய பணிகளை ஆற்றலாம். (குறுக்கீடு) இதிலே வேண்டாம் (குறுக்கீடு) அதைத்தான் சொல்லிவிட்டேன். நீங்கள் கேட்டீர்கள். கேட்டதற்கு முதலமைச்சரும் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) மேற்கொண்டு இதிலே விவாதம் போய்க்கொண்டே இருக்கும். (குறுக்கீடு) வேறு ஏதோ பிரச்சினை என்கிறார். திரு திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இல்லை. உங்களுடைய தீர்ப்பையும், முதலமைச்சருடைய ஆலோசனை அல்லது அழைப்பை, அதுபற்றிய தீர்ப்பையும், எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வரவேற்கிறேன். இரண்டாவது, இன்னும் இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இல்லையென்று சொன்னீர்கள். நீங்கள் வேறு ஏதோ ஒரு பிரச்சினை என்றால் சொல்லலாம், இதிலே வேண்டாம். சுமுகமாக அவர்கள் வந்து கலந்துகொள்ளலாம் என்று அறிவித்தாகிவிட்டது. அவர்கள் என்னதான் செய்திருந்தாலும் அதை இனிமேலும் பொருட்படுத்த வேண்டாம், அவர்கள் வந்து பணியாற்றட்டும் என்று சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) பிரச்சினை வந்துகொண்டேதான் இருக்கும். (குறுக்கீடுகள்)

5. பேரவைத் தலைவர் ஏற்கெனவே அறிவிப்புச் செய்திருக்கிற ஒரு பொருள் பற்றி முன் அனுமதியின்றி உறுப்பினர் எழுப்புதல்-பேரவைத் தலைவரின் தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒரு பிரச்சினை என்றால், வேறு ஒரு பிரச்சினை எழுப்புவதற்காக உங்களிடத்திலே அனுமதி வாங்கியிருக்கிறார்களா? அப்படி வாங்கியிருந்தால், வேறு ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொல்லலாம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு பிரச்சினை ஒன்றைச் சொல்லியிருக்கிறார். அதை விதி 55-ல் எனக்குக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் வேறு எதுவும் சொல்லவில்லை. என்னிடம் இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னீர்கள், கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு முதலமைச்சர் அவர்களே இன்றைக்குப் பதில் சொல்லியாகிவிட்டது. நானும் அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் வரலாம் என்று சொல்லியாகிவிட்டது. மேற்கொண்டு இதிலே வேண்டாம். (குறுக்கீடு) வேறு பிரச்சினை என்றால் அதை முன்கூட்டியே என்னிடம் சொல்லி அதற்கு என்னிடம் அனுமதி வாங்கவில்லையே. (குறுக்கீடு) அதைப் பற்றி நீங்கள் என்னிடம் கேட்கவில்லை (குறுக்கீடு) நான் அதைத்தான் சொல்லிவிட்டேன். அதிலே பிரச்சினை வேண்டாம், அதுபற்றி நான் ஏற்கெனவே ஓர் அறிவிப்புச் செய்திருக்கிறேன். (குறுக்கீடு). அதற்கு மேல் அதிலே வேண்டாம். (குறுக்கீடு) ஆகவேதான் நான் சொல்கிறேன். அதனால்தான் நான் இங்கே அறிவித்தேன். இந்தப் பிரச்சினைபற்றிக் கேட்கப் போகிறேன் என்று நீங்கள் என்னிடம் கேட்டிருக்க வேண்டும். (குறுக்கீடு)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்தில் வழிப்பறிக் கொள்ளையர்கள் பயணிகளைத் தாக்கியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு முக்கியப் பிரச்சினை பற்றி என்னுடைய கவனத்திற்கு திரு. பரிதி இளம்வழுதி ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். செங்கோட்டையிலிருந்து மதுரை நோக்கி வந்துகொண்டிருந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றில் வழிப்பறிக் கொள்ளையர்கள் பயணிகளைத் தாக்கியது பற்றிய பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதி அளித்திருக்கிறேன். திரு. பரிதி இளம்வழுதி. (குறுக்கீடு)

5. பேரவைத் தலைவர் ஏற்கெனவே அறிவிப்புச் செய்திருக்கிற ஒரு பொருள் பற்றி முன் அனுமதியின்றி உறுப்பினர்எழுப்புதல்-பேரவைத் தலைவரின் தீர்ப்பு-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநாவுக்கரசு, நீங்கள் என்னிடம் கேட்காமல் எழுப்புகிறீர்கள். (குறுக்கீடு) ஒரு பிரச்சினை கேட்கப்பட்டது, அந்த ஒரு பிரச்சினைக்கு இப்போது முடிவு கண்டிருக்கிறோம். (குறுக்கீடு) சட்டசபை சம்பந்தப்பட்டது என்றால் என்னிடம் கேட்டிருக்கவேண்டும், ஆனால் நீங்கள் கேட்கவில்லை. (குறுக்கீடு) என்னிடம் கேட்டிருக்கவேண்டும் அல்லவா? நீங்கள் என்ன பிரச்சினை என்று என்னிடம் கேட்டிருந்தால் நான் உங்களுக்கு அனுமதி அளித்திருப்பேன் (குறுக்கீடு) நான் உங்களுக்கு அனுமதி அளிக்கிறேன் என்று ஒரு பிரச்சினைக்குச் சொல்லியிருந்தேன். அதை திரு. பழனிசாமி அவர்கள் எழுப்பி, அந்தப் பிரச்சினைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதிலளித்து, என்னுடைய தீர்ப்பையும் வழங்கி இருக்கிறேன். அது தவிர நீங்கள் என்னிடம் எதற்கும் அனுமதி பெறவில்லை. எனவே அனுமதி பெறாமல் அவையின் நேரத்தை வீணடிக்க வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு).

(திரு. எஸ். திருநாவுக்கரசு அவையை விட்டு வெளியேறினார்)

திரு. திருநாவுக்கரசு பேசிய எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது.

6. சிறப்புக் கவன ஈர்ப்பு-தொடர்ச்சி

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்தில் வழிப்பறிக் கொள்ளையர்கள் பயணிகளைத் தாக்கியது குறித்து-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு இளம்வழுதி.

***திரு. இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமை அன்று செங்கோட்டையிலிருந்து மதுரைக்கு வந்துகொண்டிருந்த, பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்ஸில் பயணம் செய்த பயணிகளிடம் அதே பஸ்ஸில் பயணம் செய்த கொள்ளையர்கள் சிலர் அரிவாளால் தாக்கியும், வெடிகுண்டு வீசியும் தங்க நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள். கத்தியைக் காட்டி கண்டக்டரை மிரட்டியபோது பஸ் மெதுவாகச் சென்றுகொண்டு இருந்த காரணத்தால் கண்டக்டர் அந்த பஸ்ஸில்